# 8th Std சமூக அறிவியல்

## முதல் பருவம்

## Book Back Questions

www.winmeen.com

# 8th Social Science 1st Term Book Back Questions in Tamil

## 8ஆம் வகுப்பு – சமூக அறிவியல் - முதல் பருவம்

## அலகு – 1 ஐரோப்பியர்களின் வருகை

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?

(அ) வாஸ்கோடகாமா (ஆ) பார்த்தரோமியோ டயஸ்

**(இ) அல்போன்சோ-டி-அல்புகர்க்** (ஈ) அல்மெய்டா

2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?

(அ) நெதர்லாந்து (டச்சு) **(ஆ) போர்ச்சுகல்** (இ) பிரான்ஸ் (ஈ) பிரிட்டன்

3. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

(அ) பிரான்ஸ் **(ஆ) துருக்கி** (இ) நெதர்லாந்து (டச்சு) (ஈ) பிரிட்டன்

4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ---------- நாட்டைச் சேர்ந்தவர்

(அ) போர்ச்சுகல் (ஆ) ஸ்பெயின் **(இ) இங்கிலாந்து** (ஈ) பிரான்ஸ்

5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை

(அ) வில்லியம் கோட்டை **(ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை**

(இ) ஆக்ரா கோட்டை (ஈ) டேவிட் கோட்டை

6. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்

(அ) ஆங்கிலேயர்கள் **(ஆ) பிரெஞ்சுக்காரர்கள்** (இ) டேனியர்கள் (ஈ) போர்ச்சுகீசியர்கள்

7. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி --------- வர்த்தக மையமாக இருந்தது

(அ) போர்ச்சுகீசியர்கள் (ஆ) ஆங்கிலேயர்கள்

(இ) பிரெஞ்சுக்காரர்கள் **(ஈ) டேனியர்கள்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) --------------- ல் அமைந்துள்ளது

**விடை: புது தில்லியில்**

2. போர்ச்சுகீசிய மாலுமியான பாத்தலோமியோ டயஸ் ------------- என்பவரால் ஆதரிக்கப்பட்டார்

**விடை: மன்னர் இரண்டாம் ஜான்**

3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556ல் ------------------ அரசால் கோவாவில் நிறுவப்பட்டது

**விடை: போர்ச்சுகீசிய**

4. முகலாயப் பேரரசர் ------------ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார்

**விடை: ஜஹாங்கீர்**

5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ---------- என்பவரால் நிறுவப்பட்டது

**விடை: கால்பர்ட்**

6. --------------- என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார்

**விடை: நான்காம் கிறிஸ்டியன்**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. டச்சுக்காரர்கள் | அ. 1664 |
| 2. ஆங்கிலேயர்கள் | ஆ. 1602 |
| 3. டேனியர்கள் | இ. 1600 |
| 4. பிரெஞ்சுக்காரர்கள் | ஈ. 1616 |

**விடை: 1-ஆ, 2-இ, 3-ஈ. 4-அ**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்

**விடை: சரி**

2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும்

**விடை: சரி**

3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார்

**விடை: தவறு**

4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. 1. கவர்னர் நினோ-டி-குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியலிருந்து கோவாவிற்கு மாற்றினார்

2. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்

3. டச்சுக்காரர்கள் சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்

4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்

(அ) 1 மற்றும் 2 சரி (ஆ) 2 மற்றும் 4 சரி

(இ) 3 மட்டும் சரி **(ஈ) 1, 2 மற்றும் 4 சரி**

**தவறான இணையைக் கண்டறிக:**

1. 1. பிரான்சிஸ் டே - டென்மார்க்
   2. பெட்ரோ காப்ரல் - போர்ச்சுகல்
   3. கேப்டன் ஹாக்கின்ஸ் - இங்கிலாந்து
   4. கால்பர்ட் - பிரான்ஸ்

   **விடை: 3. கேப்டன் ஹாக்கின்ஸ் - பிரிட்டன்**

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ஆனந்தரங்கம் ----------- பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக (Dubash) இருந்தார்

   **(அ) பாண்டிச்சேரி** (ஆ) சூரத் (இ) டாமன் (ஈ) சென்னை

2. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் சென்னை பதிப்பாசனம் ------------யில் அமைந்துள்ளது

   (அ) டெல்லி **(ஆ) சென்னை** (இ) மதுரை (ஈ) திருச்சி

3. டெல்லியிலுள்ள இந்தியாவின் மிகப்பெரும் அருங்காட்சியகம் தொடங்கப்பட்ட ஆண்டு -------

   **(அ) 1949** (ஆ) 1849 (இ) 1947 (ஈ) 1955

4. 1690ல் ------------ ஆங்கிலேயரால் கடலூரில் கட்டப்பட்டது

   (அ) புனித ஜார்ஜ் கோட்டை (ஆ) தரங்கம்பாடி கோட்டை

   **(இ) புனித டேவிட் கோட்டை** (ஈ) வில்லியம் கோட்டை

5. வாஸ்கோடகாமா இரண்டாவது முறையாக இந்தியா வந்தபொழுது --------------இல் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்

   (அ) கொச்சின் (ஆ) கள்ளிக்கோட்டை **(இ) கண்ணனூர்** (ஈ) கோவா

6. நினோ-டி-குன்கா 1530ல் தலைநகர் கொச்சியிலிருந்து ----------விற்கு மாற்றினார்

   **(அ) கோவா** (ஆ) கொல்கத்தா (இ) மும்பை (ஈ) டெல்லி

7. ---------------- டச்சுக்காரர்களின் தலைநகராக இருந்தது

   (அ) கோவா (ஆ) டையூ (இ) டாமன் **(ஈ) பழவேற்காடு**

8. இந்தியாவின் முதல் பிரெஞ்சு வணிகமையம் -------

   (அ) மும்பை **(ஆ) சூரத்** (இ) மசூலிப்பட்டினம் (ஈ) மாஹி

9. பாண்டிச்சேரி --------------ன் மிக முக்கியமான மற்றும் வளமான குடியேற்றமாக விளங்கியது

   (அ) ஆங்கிலேயர்கள் **(ஆ) பிரான்ஸ்** (இ) டச்சு (ஈ) டேனியர்கள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றி --------------- என அழைக்கப்பட்டார்

   **விடை: மாலுமி ஹென்றி**

2. பிரான்சிஸ்-டி-அல்மெய்டா ------------- யை பின்பற்றினார்

   **விடை: நீலநீர்க் கொள்கை**

3. பிரான்சிஸ் இரண்டாவது வர்த்தக மையம் ---------

   **விடை: மசூலிப்பட்டினம்**

4. அல்போன்சா-டி-அல்புகர்க் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து 1510ல் --------- கைப்பற்றினார்

   **விடை: கோவாவைக்**

5. ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் என்பவர் இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் ------------ என அழைக்கப்படுகிறார்

   **விடை: தந்தை**

6. சான்றுகளின் வகைகள் --------- வகைப்படும்

   **விடை: இரண்டு**

7. சென்னை நாட்குறிப்பு பதிவுகள் ----------ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது

   **விடை:1917**

8. ரிசர்சவ் வங்கி முறையாக --------------ல் நிறுவப்பட்டது

   **விடை: 1935**

9. கி.பி. 1487 ஆம் ஆண்டு போர்ச்சுகீசிய மாலுமியான பார்த்தலோமியா டயஸ் ---------- முனையை அடைந்தார்

   **விடை: தெற்கு**

10. 1759ல் நடைபெற்ற --------- போரில் ஆங்கிலேயர்கள், டச்சுகாரர்களைத் தோற்கடித்தனர்

   **விடை: பெடரா**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. புனித பிரான்சிஸ் ஆலயம் | அ. கடலூர் |
| 2. புனித லூயிஸ் கோட்டை | ஆ. சென்னை |
| 3. புனித ஜார்ஜ் கோட்டை | இ. பாண்டிச்சேரி |
| 4. புனித டேவிட் கோட்டை | ஈ. கொச்சி |

   **விடை: 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன

**விடை: சரி**

2. இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசு தலைவர் மாளிகை போன்றவை எழுதப்பட்ட ஆதாரங்களுக்கு சான்றாகும்

**விடை: தவறு**

3. லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் ஆவணக் காப்பகங்கள் உள்ளன.

**விடை: சரி**

4. அல்போன்சோ-டி-அல்புகர்க் இந்திய பெண்களுடனான போர்ச்சுகீசிய திருமணங்களை எதிர்த்தார்

**விடை: தவறு**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. 1. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி 1664ல் கால்பர்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது

2. முகாலாயப் பேரரசர் ஜஹாங்கீர் சூரத்தில் வர்த்தக மையம் அமைக்க ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு 1613-ல் அனுமதி வழங்கினார்

3. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் டச்சு இளவரசி கேத்தினை திருமணம் செய்து கொண்டார்

4. 1796ல் சுதாசூதியில் வலுவான ஒரு கோட்டை கட்டப்பட்டது. இது 1800ல் வில்லியம் கோட்டை என்று அழைக்கப்பட்டது

(அ) 2 மற்றும் 4 சரி **(ஆ) 1 மற்றும் 2 சரி** (இ) 3 மற்றும் 4 சரி (ஈ) 3 மற்றும் 4 தவறு

**தவறான இணையைக் கண்டறியும்:**

1. அ. பம்பாய்தீவு - குத்தகை

ஆ. பரங்கிப் பேட்டை - டச்சு கோட்டை

இ. வில்லியம் ஹாக்கின்ஸ் - கவர்னர்

ஈ. கேல்டிரியா கோட்டை - பழவேற்காடு

**விடை: இ. வில்லியம் ஹாக்கின்ஸ் - கவர்னர்**

## அலகு – 2 வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்

(அ) சுஜா-உத்-தௌலா **(ஆ) சிராஜ்-உத்-தௌலா**

(இ) மீர்காசிம் (ஈ) திப்பு சுல்தான்

2. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

**(அ) 1757** (ஆ) 1764 (இ) 1765 (ஈ) 1775

3. பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை

**(அ) அலகாபாத் உடன்படிக்கை** (ஆ) கர்நாடக உடன்படிக்கை

(இ) அலிநகர் உடன்படிக்கை (ஈ) பாரிசு உடன்படிக்கை

4. பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி --------- கர்நாடக போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது

(அ) முதல் **(ஆ) இரண்டாம்** (இ) மூன்றாம் (ஈ) ஏதுமில்லை

5. ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு -----------

(அ) 1756 **(ஆ) 1761** (இ) 1763 (ஈ) 1764

6. மங்களூர் உடன்படிக்கை இவர்களுக்கு இடையே கையெழுத்தானது

(அ) பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் திப்பு சுல்தான்

(ஆ) ஹைதர் அலி மற்றும் கள்ளிக்கோட்டை மன்னர் சாமரின்

**(இ) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்**

(ஈ) திப்பு சுல்தான் மற்றும் மராத்தியர்கள்

7. மூன்றாம் ஆங்கிலேய – மைசூர் போரின் போது ஆங்கிலேய தலைமை ஆளுநர் -------

(அ) இராபர்ட் கிளைவ் (ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

**(இ) காரன்வாலிஸ்** (ஈ) வெல்லெஸ்லி

8. ஆங்கிலேயருடன் பசீன் உடன்படிக்கை செய்து கொண்டவர் ---------

**(அ) இரண்டாம் பாஜிராவ்** (ஆ) தௌலத்ராவ் சிந்தியா

(இ) ஷாம்பாஜி போன்ஸ்லே (ஈ) ஷாயாஜி ராவ் கெயக்வாட்

9. மராத்திய பேரரசின் கடைசி பீஷ்வா ------------

(அ) பாலாஜி விஸ்வநாத் **(ஆ) இரண்டாம் பாஜிராவ்**

(இ) பாலாஜி பாஜிராவ் (ஈ) பாஜிராவ்

10. துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?

(அ) அயோத்தி **(ஆ) ஹைதராபாத்** (இ) உதய்பூர் (ஈ) குவாலியர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு ---------

**விடை: 1757**

2. சிராஜ் உத்-தௌலாவின் தலைமை படைத்தளபதி ---------------

**விடை: மிர் ஜபார்**

3. இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் ------

**விடை: வாரிசுரிமை பிரச்சினை**

4. இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரிவுப்படுத்துவற்காக வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் ------------

**விடை: டல்ஹௌசி**

5. திப்பு சுல்தானை இறுதியாக தோற்கடித்தவர் ---------

**விடை: வெல்லெஸ்லி**

6. திப்பு சுல்தான் இறப்புக்கு பின் -------- வசம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது

**விடை: மூன்றாம் கிருஷ்ணராஜா உடையார்**

7. 1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியர்

**விடை: வெல்லெஸ்லி**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. ஆய்-லா-சப்பேல் உடன்படிக்கை | அ. முதல் ஆங்கிலேய மைசூர் போர் |
| 2. சால்பை உடன்படிக்கை | ஆ. முதல் கர்நாடகப் போர் |
| 3. பாரிஸ் உடன்படிக்கை | இ. மூன்றாம் கர்நாடகப் போர் |
| 4. ஸ்ரீரங்கபட்டின உடன்படிக்கை | ஈ. முதல் மராத்திய போர் |
| 5. மதராஸ் உடன்படிக்கை | உ. மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் |

**விடை:1-ஆ. 2-ஈ. 3-இ, 4-உ, 5-அ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. அலிவர்திகான் மறைவுக்கு பின்னர் சிராஜ்-உத்-தௌலா வங்காளத்தின் அரியணை ஏறினார்

**விடை: சரி**

2. பிளாசிப் போரில் ஆங்கிலேயப் படையை வழி நடத்தியவர் ஹெக்டர் மன்றோ ஆவார்

**விடை: தவறு**

3. ஐரோப்பாவில் வெடித்த ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இரண்டாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது

**விடை: தவறு**

4. வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்

**விடை: சரி**

5. காரன் வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார்

**விடை: சரி**

**சரியான இணையைக் கண்டறியும்:**

1. 1. அடையாறு போர் - 1748

   2. ஆம்பூர் போர் - 1754

   3. வந்தவாசிப்போர் - 1760

   4. ஆற்காட்டுப் போர் - 1749

   **விடை: 3. வந்தவாசிப்போர் - 1760**

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ஐரோப்பாவில் ஏற்பட்ட ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் பிரிட்டன் மற்றும் ---------- எதிர் எதிர் அணியின் இருந்தன

   **(அ) பிரான்சு** (ஆ) ஸ்பெயின் (இ) போர்ச்சுகல் (ஈ) டென்மார்க்

2. கவுண்டி – லாலி கடலூரில் உள்ள --------- கைப்பற்றினார்

   (அ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை (ஆ) வில்லியம் கோட்டை

   **(இ) டேவிட் கோட்டை** (ஈ) செங்கோட்டை

3. 1798-ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக -------- பதவியேற்றுக் கொண்டார்

   (அ) டல்ஹௌளசி பிரபு **(ஆ) வெல்லெஸ்லி பிரபு**

   (இ) லிட்டன் பிரபு (ஈ) சர் சால்லஸ் உட்

4. இந்திய அரசுச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ---------

   **(அ) 1858** (ஆ) 1758 (இ) 1856 (ஈ) 1857

5. ------------ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்திய ஆட்சிப்பணி சட்டம் இயற்றப்பட்டது

   **(அ) 1861** (ஆ) 1561 (இ) 1671 (ஈ) 1871

6. சிராஜ்-உத்-தௌளா ------------ன் அரியணை ஏறினார்

   (அ) பீகார் (ஆ) இராஜஸ்தான் (இ) ஹைதராபாத் **(ஈ) வங்காளம்**

7. கர்நாடகப் போர்கள் ----------- முதல் ----------- வரையிலான காலத்தில் நடைப்பெற்றது

   **(அ) 1746 முதல் 1763** (ஆ) 1799 முதல் 1816

   (இ) 1736 முதல் 1753 (ஈ) 1846 முதல் 1863

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. 1757ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் -------, ------------- , ----------- ஆகிய பகுதிகளில் ஆங்கிலேயர்கள் தடையில்லா வணிக உரிமை பெற்றனர்

   **விடை: வங்காளம், பீகார், ஒடிசா**

2. இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் --------- முறையை கொண்டு வந்தார்

**விடை: இரட்டையாட்சி**

3. ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப்போர் --------- படி முடிவுக்கு வந்தது

**விடை: பாரிசு உடன்படிக்கையின்**

4. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி விரிவாக்கத்திற்கு எதிராக --------------- , ---------------- முக்கிய பங்காற்றினார்.

**விடை: ஹைதர் அலியும், அவரது மகன் திப்பு சுல்தானும்**

5. 1761-ல் ஹைதர் அலி ------------ சமஸ்தானத்தின் உண்மையான ஆட்சியாளரானார்

**விடை: மைசூர்**

6. இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் இரண்டாவது முக்கிய தூணாக விளங்கியது ----------- ஆகும்

**விடை: இராணுவம்**

7. இந்தியாவில் முதன்முதலில் காவல் துறையை உருவாக்கியவர் --------- ஆவார்

**விடை: காரன்வாலிஸ் பிரபு**

8. வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி ------- ஆவார்

**விடை: சர் எலிஜா இம்பே**

9. இந்தியாவில் ஆங்கிலேய பேரரசு என்பதை --------- இந்தியாவின் ஆங்கிலேய பேரரசு என்று மாற்றினார்

**விடை: வெல்லெஸ்லி பிரபு**

10. ஆங்கிலேய பேரரசை விரிவுபடுத்துவதற்காக டல்ஹௌசி பிரபு -------- என்ற புதிய கொள்கையை கொண்டு வந்தார்

**விடை: வாரிசு இழப்புக் கொள்கை**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. பாண்டிச்சேரி உடன்படிக்கை | அ. 1799 |
| 2. மங்களூர் உடன்படிக்கை | ஆ. 1790-1792 |
| 3. முதல் ஆங்கிலேய மைசூர் போர் | இ. 1780 – 1784 |
| 4. இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர் | ஈ. 1755 |
| 5. மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் | உ. 1784 |
| 6. நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் | ஊ. 1767 – 1769 |

**விடை: 1-ஈ. 2-உ, 3-ஊ, 4-இ, 5-ஆ. 6-அ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. 1769ல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றத் தவறினர்

**விடை: சரி**

2. ஹைதர் அலியின் வளர்ச்சி அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு ஆகியன ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நட்புக்கு காரணமாயின

**விடை: தவறு**

3. இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தலையாய சக்தியாக மாறத் தொடங்கியது

**விடை: சரி**

4. சுதேச அரசின் தலைமையகத்தில் இந்தியரின் பிரதிநிதி ஒருவர் இருப்பார்

**விடை: தவறு**

5. அலநகர் உடன்படிக்கை 1756 பிப்ரவரி 9ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது

**விடை: தவறு**

## அலகு – 3 கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ஜாகீர்தாரி, மல்குஜாரி, பிஸ்வேதாரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நிலவரி முறை எது?

(அ) மகல்வாரி முறை (ஆ) இரயத்துவாரி முறை

(இ) ஜமீன்தாரி முறை **(ஈ) இவற்றில் எதுவுமில்லை**

2. எந்த கவர்னர்-ஜெனரலின் காலத்தில், வங்காளத்தில் நிரந்தர நிலவரித் திட்டம் செய்து கொள்ளப்பட்டது?

(அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு **(ஆ) காரன்வாலிஸ் பிரபு**

(இ) வெல்லெஸ்லி பிரபு (ஈ) மிண்டோ பிரபு

3. மகல்வாரி முறையில் "மகல்" என்றால் என்ன?

(அ) வீடு (ஆ) நிலம் **(இ) கிராமம்** (ஈ) அரண்மனை

4. மகல்வாரி முறை எந்தப்பகுதியில் செய்துகொள்ளப்பட்டது?

(அ) மகாராஷ்டிரா (ஆ) மதராஸ் (இ) வங்காளம் **(ஈ) பஞ்சாப்**

5. கீழ்காணும் கவர்னர்களுள் மகல்வாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?

(அ) ஹேஸ்டிங்ஸ் பீரபு (ஆ) காரன்வாலிஸ் பிரபு

(இ) வெல்லெஸ்லி பிரபு **(ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு**

6. ஆங்கிலேயரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?

(அ) பம்பாய் (ஆ) மதராஸ் **(இ) வங்காளம்** (ஈ) இவற்றில் எதுவுமில்லை

7. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி யாரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?

(அ) மகாத்மா காந்தி (ஆ) கேசப் சந்திரராய்

**(இ) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்** (ஈ) சர்தார் வல்லபாய் பட்டேல்

8. பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?

**(அ) சர்தார் வல்லபாய் பட்டேல்** (ஆ) மகாத்மா காந்தி

(இ) திகம்பர் பிஸ்வாஸ் (ஈ) கேசப் சந்திர ராய்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ------------ என்பது ஜமீன்தார் முறையின் திருத்தப்பட்ட முறையாகும்

**விடை: மகல்வாரி**

2. மகல்வாரி முறை --------- என்பவரின் சிந்தனையில் உதித்த திட்டம் ஆகும்

**விடை: ஹோல்ட் மெகன்சி**

3. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி ------------ல் நடைபெற்றது

**விடை: பெங்காலில்**

4. மாப்ளா கலகம் ----------ல் நடைபெற்றது

**விடை: ஆகஸ்ட் 1921**

5. 'சம்பரான் விவசாயச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட ஆண்டு --------

**மே 1918**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. நிரந்தர நிலவரி திட்டம் | அ. மதராஸ் |
| 2. மகல்வாரி முறை | ஆ. இண்டிகோ விவசாயிகளின் துயரம் |
| 3. இரயத்துவாரி முறை | இ. வடமேற்கு மாகாணம் |
| 4. நீர் தர்பன் | ஈ. வங்காளம் |
| 5. சந்தால் கலகம் | உ. முதல் விவசாயிகள் கிளர்ச்சி |

**விடை: 1-ஈ, 2-இ, 3-அ, 4-ஆ. 5-உ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்

**விடை: சரி**

2. இரயத்துவாரி முறை, தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது

**விடை: சரி**

3. குஜராத்தின் யூசுப்ஷாகி என்ற பர்கானாவில் பாப்னா கலகம் ஏற்பட்டது

**விடை: தவறு**

4. “பஞ்சாப் நில உரிமை மாற்றுறு சட்டம்” 1918ல் நிறைவேற்றப்பட்டது

**விடை: தவறு**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. கீழ்கண்டவற்றுள் எந்த ஒன்று ஜமீன்தாரி முறைப் பற்றிய தவறான கூற்றாகும்

1. இந்த முறை 1793ல் அறிமுகப்படுத்தப்பட்டது

2. ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளர் ஆவார்

**3. விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட வருவாய் நிலையாக கிடைத்தது**

4. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19% நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது

2. கீழ்க்கண்டவற்றுள் இந்தியாவில் நடைபெற்ற விவசாய புரட்சி பற்றிய சரியான கூற்று எது?

1. சந்தால் கலகம் வங்காளத்தில் நடைபெற்றது

**2. நீல் தர்பன் என்ற நாடகம் தீன பந்து மித்ராவால் எழுதப்பட்டது**

3. தக்காண கலகம் 1873ல் பூனாவில் உள்ள கிராமம் ஒன்றில் துவங்கியது

4. மாப்ளா கலகம் தமிழகத்தில் நடைபெற்றது

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ------------- முறை 1820ல் தாமஸ்மன்றோ மற்றும் கேப்டர் ரீட் என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது

**(அ) இரயத்துவாரி** (ஆ) நிலையான நிலவரி (இ) மகல்வாரி (ஈ) ஜமீன்தாரி

2. ---------- மற்றும் ------------- நூற்றாண்டுகளில் விவசாயிகள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக பல கலகங்கள் மற்றும் புரட்சி இயக்கங்களிலும் ஈடுபட்டனர்

(அ) 20 மற்றும் 21 **(ஆ) 19 மற்றும் 20** (இ) 21 மற்றும் 22 (ஈ) 18 மற்றும் 19

3. 1855-56ல் விவசாயிகளின் எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் ---------- ஆகும்

(அ) தக்காண கலகம் (ஆ) பாப்னா கலகம்

**(இ) சந்தால் கலகம்** (ஈ) இண்டிகோ கலகம்

4. அவுரி ஆணையம் அமைக்கப்பட்ட வருடம் --------------

(அ) 1862 **(ஆ) 1860** (இ) 1865 (ஈ) 1868

5. மலபார் மாவட்ட மாநாடு -----------ல் நடைபெற்றது

(அ) 1820 (ஆ) 1825 **(இ) 1920** (ஈ) 1922

6. பூனா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 1875ஆம் ஆண்டு ஈடுபட்ட கலகம் -------

**(அ) தக்காண கலகம்** (ஆ) மாப்ளா கிளர்ச்சி

(இ) இண்டிகோ கலகம் (ஈ) பாப்னா கலகம்

7. வரிகொடா இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு ------

(அ) 1938 **(ஆ) 1928** (இ) 1930 (ஈ) 1935

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

3. ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகிலிருந்த நிலங்கள் --------- பயிரிடப்பட்டன

**விடை: சந்தால்களால்**

2. 1937ல் ------------ ஆட்சிக்கு வந்தபொழுது விவசாயிகளின் நிலம் அனைத்தும் அவர்களுக்கே திருப்பி தரப்பட்டது

**விடை: காங்கிரஸ்**

3. தீனபந்து மிஸ்ரா என்பவர் ---------- என்ற நாடகத்தை வங்க மொழியில் எழுதினார்

**விடை: நீலதர்பன்**

4. பஞ்சாப் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 1900ல் --------- சட்டம் நிறைவேற்றப்பட்டது

**விடை: பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்**

5. 1918ல் குஜராத்தின் ------------- மாவட்டத்தில் இடையராத பஞ்சத்தின் காரணமாக விவசாயம் பொய்த்தது

**விடை: கேடா**

6. ------------- மற்றும் -------------- ஆகியோரால் நாதியா மாவட்டத்தில் கலகங்கள் நடைப்பெற்றன.

**விடை: திகம்பர் பிஸ்வால் மற்றும் பிஸ்னு சரண்**

7. ஐரோப்பிய பண்ணையாளர்களின் அடக்கமுறைக்கு பயந்து வங்காளத்தின் அவுரி விவசாயிகள் ---------- மற்றும் ------------- ல் குடியேறினர்

**விடை: பீகார் மற்றும் உத்திரபிரதேசம்**

8. ---------- என்ற செய்தித்தாள் சாகுபடியாளர்களின் துயரங்களை வெளிக்கொண்டு வந்தது

**விடை: இந்து தேசபக்தன்**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. சந்தால்கள் | அ. வங்காளம் |
| 2. பாப்னா கலகம் | ஆ. பீகார் |
| 3. தக்காண கலகம் | இ. குஜராத் |
| 4. சம்பிரான் சத்தியாகிரகம் | ஈ. சந்தால் பர்கானா |
| 5. கைரா | உ. 1875 |

**விடை: 1-ஈ. 2-அ, 3-உ, 4-ஆ, 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. பாப்னா விவசாய எழுச்சி என்பது விவசாயிகளால் நடத்தப்பட்டது

**விடை: சரி**

2. குஜராத் அவுரி சாகுபடியாளர்களின் வேலை நிறுத்தம் அதிகளவில் பரவி விவசாய புரட்சியாக மாறியது.

**விடை: தவறு**

3. தக்காண விவசாயிகள் மீட்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் விவசாயிகளின் குறைகள் களையப்பட்டது

**விடை: சரி**

4. 1928ல் 30 சதவீதம் அளவிற்கு அரசு நிலவருவாயை உயர்த்தியது

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று சந்தால் கலகம் பற்றிய தவறான கூற்றாகும்

அ. 1855-56ல் விவசாயிகளின் எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் சந்தால் கலகமாகும்

ஆ. இக்கலகம் 1858ல் ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு இட்டுச் சென்றது

**இ. ஜமீன்தாரர்கள் பண்ணையாளர்கள், ஆங்கிலேய அலுவலர்கள், இரயில்வே பொறியாளர்கள், ஜமீன்தாரர்கள் மற்றும் வட்டிக்கு பணம் கொடுப்போர் ஆகிய அனைவரும் புரட்சியாளர்களால் தாக்கப்பட்டனர்.**

ஈ. புரட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து கலகம் அடக்கப்பட்டது

2. கீழ்கண்டவற்றுள் நிலையான நிலவரித் திட்டம் பற்றிய சரியான கூற்று எது?

அ. விவசாயிகள் நிலத்தின் உரிமையாளர் ஆயினர்

ஆ. ஆங்கில அரசுக்கு நிலையான வருவாய் கிடைக்கவில்லை

**இ. விவசாயிகளிடமிருந்து வசூலித்த 10/11 பங்கு வரியினை ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு செலுத்தினர்**

ஈ. விவசாயிகளிடமிருந்து வரியை வசூல் செய்யும் அரசின் முகவர்களாக ஜமீன்தார்கள் செயல்படவில்லை

## அலகு – 4 மக்களின் புரட்சி

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. பாளையக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு

(அ) 1519 (ஆ) 1520 **(இ) 1529** (ஈ) 1530

2. பின்வரும் தமிழ்நாட்டு பாளையக்காரர்களுள் ஆங்கில ஆட்சியை எதிர்த்ததில் முன்னோடியானவர்

**(அ) பூலித்தேவன்** (ஆ) யூசுப்கான் (இ) கட்டபொம்மன் (ஈ) மருது சகோதரர்கள்

3. காலின் ஜாக்சன் எந்தப் பகுதியின் ஆட்சியாளர்?

(அ) மதுரை (ஆ) திருநெல்வேலி **(இ) இராமநாதபுரம்** (ஈ) தூத்துக்குடி

4. வீரபாண்டிய கட்டபொம்மன் கீழ்க்கண்ட எந்த இடத்தில் தூக்கிலிடப்பட்டார்?

(அ) பாஞ்சாலங்குறிச்சி (ஆ) சிவகங்கை (இ) திருப்பத்தூர் **(இ) கயத்தாறு**

5. வேலு நாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?

(அ) நாகலாபுரம் (ஆ) சிவகிரி **(இ) சிவகங்கை** (ஈ) விருப்பாச்சி

6. "திருச்சிராப்பள்ளி பிரகடனம்" யாரால் வெளியிடப்பட்டது?

**(அ) மருது பாண்டியர்கள்** (ஆ) கிருஷ்ணப்ப நாயக்கர்

(இ) வேலு நாச்சியார் (ஈ) தீரன் சின்னமலை

7. கீழ்க்கண்டவைகளுள் தீரன் சின்மலையோடு தொடர்புடைய பகுதி எது?

(அ) திண்டுக்கல் (ஆ) நாகலாபுரம் (இ) புதுக்கோட்டை **(ஈ) ஓடாநிலை**

8. ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழி நடத்தினார்?

**(அ) மத்திய இந்தியா** (ஆ) டெல்லி (இ) கான்பூர் (ஈ) பரெய்லி

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கிழக்குப்பகுதி பாளையங்கள் ---------- கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது

**விடை: கட்டபொம்மன்**

2. விஸ்வநாத நாயக்கர் அவரது அமைச்சர் ---------- உடன் கலந்தாலோசித்து பாளையக்கார முறையை ஏற்படுத்தினார்

**விடை: அரியநாதர்**

3. கட்டபொம்மனின் முன்னோர்கள் ------- பகுதியைச் சார்ந்தவர்கள்

**விடை: ஆந்திரா**

4. ---------- தமிழர்களால் "வீர மங்கை" எனவும் தென்னிந்தியாவின் ஜான்சி ராணி எனவும் அறியப்பட்டார்

**விடை: வேலுநாச்சியார்**

5. ---------- 'சிவகங்கையின் சிங்கம்' என அழைக்கப்படுகிறார்

**விடை: சின்ன மருது**

6. 1857ஆம் ஆண்டு புரட்சியை ---------- என்பவர் 'முதல் இந்திய சுதந்திரப் போர்' என விவரிக்கிறார்

**விடை: வி.டி.சவார்க்கர்**

**பொருத்துக:**

1. 1. டெல்லி அ. கன்வர் சிங்

2. கான்பூர் ஆ. கான்பகதூர் கான்

3. ஜான்சி இ. நானா சாகிப்

4. பரெய்லி ஈ. லட்சுமி பாய்

5. பீகார் உ. இரண்டாம் பகதூர்ஷா

**விடை: 1-உ, 2-இ, 3-ஈ. 4-ஆ. 5-அ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர்

**விடை: சரி**

2. சிவசுப்பிரமணியம் என்பவர் மருது பாண்டியர்களின் அமைச்சர் ஆவார்

**விடை: தவறு**

3. 1799 அக்டோபர் 17ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்

**விடை: சரி**

4. திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் ஆவார்

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. i. வேலூர் புரட்சி 1801ஆம் ஆண்டு ஏற்பட்டது

ii. நான்காம் மைசூர் போருக்குப்பின் திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர்.

iii. வேலூர் புரட்சியின் போது வில்லியம் பெண்டிங் சென்னையின் ஆளுநராக இருந்தார்

iv. ஆங்கிலேயருக்கு எதிரான வேலூர் கலகத்தின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு ஆகும்

(அ) i மற்றும் ii சரி (ஆ) i மற்றும் iv சரி

**(இ) ii மற்றும் iii சரி** (ஈ) i, ii மற்றும் iv சரி

**தவறான இணையைக் கண்டறியும்:**

1. **அ. மருது பாண்டியர் - எட்டயபுரம்**

ஆ. கோபால நாயக்கர் - திண்டுக்கல்

இ. கேரளவர்மன் - மலபார்

ஈ. துண்டாஜி - மைசூர்

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. -------------- இராணுவத்தின் மூலம் தீரன் சின்னமலை நவீன போர் முறையில் பயிற்சி பெற்றார்

**(அ) பிரெஞ்சு** (ஆ) ஆங்கிலேயர்கள் (இ) ஸ்பெயின் (ஈ) ரஷ்யா

2. -------------- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கெதிராக போரிட்டார்

(அ) வில்லியம் **(ஆ) திப்புசுல்தான்** (இ) வில்லியம் டைலம் (ஈ) கேம்பெல்

3. விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு ---------

(அ) 1856 (ஆ) 1857 **(இ) 1858** (ஈ) 1859

4. 1857 பெரும் புரட்சி முதலில் வெடித்த இடம் ----------

(அ) ஜான்சி (ஆ) பரெய்லி **(இ) பாரக்பூர்** (ஈ) டெல்லி

5. மத்திய இந்தியாவில் புரட்சியை வழி நடத்தியவர் -----

**(அ) ஜான்சிராணி** (ஆ) தாந்தியாதோப் (இ) பேகம் ஹஸ்ரத் மகால் (ஈ) கன்வர் சிங்

6. ------------ தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையமாகத் திகழ்ந்தது

**(அ) வேலூர் கோட்டை** (ஆ) டேவிட் கோட்டை

(இ) புனித ஜார்ஜ் கோட்டை (ஈ) டேனிஷ் கோட்டை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. விஜயநகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் ----------- நியமித்தனர்

**விடை: நாயக்கர்களை**

2. 1529ல் ------------- மதுரை நாயக்கரானர்

**விடை: விஸ்வநாதர்**

3. ஆங்கிலேயர் பெற்ற ---------- வசூலிக்கும் உரிமையில் பாளையக்காரர்கள் கலகம் வெடித்தது

**விடை: வரி**

4. ------------ வசூலித்த கட்டபொம்மனுக்கு ஆங்கிலேயருக்கிடையே போட்டி ஏற்பட முதன்மை காரணமானது

**விடை: கப்பம் (வரி)**

5. மருது சகோதரர்கள் ---------- மற்றும் ------------ ஆகியோரின் மகன்களாவார்

**விடை: மூக்கையா பழனியப்பன் மற்றும் பொன்னாத்தாள்**

6. 1857 புரட்சிக்கு பின் கவர்னர் ஜெனரல் ------------- என அழைக்கப்பட்டார்

**விடை: வைசிராய்**

7. இராமநாதபுர கலெக்டர் ------------ ஆவார்

**விடை: காலின் ஜாக்சன்**

8. 1798ல் கட்டபொம்மன் தனது அமைச்சர் ----------- உடன் இராமநாதபுர கலெக்டரைச் சந்தித்தார்

**விடை: சிவசுப்பிரமணியம்**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. தீரன் சின்னமலை | அ. வேலூர் கலகம் |
| 2. முதல் இந்திய சுதந்திரப்போர் | ஆ. பாரக்பூர் |
| 3. உடனடிக் காரணம் | இ. கானிங் பிரபு |
| 4. மங்கள் பாண்டே | ஈ. என்பீல்டு ரக துப்பாக்கி |
| 5. 1857 பெரும் புரட்சி | உ. சமையல்காரர் நல்லப்பன் |

**விடை: 1-உ, 2-அ, 3-ஈ. 4-ஆ. 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. 1857 புரட்சி இந்திய மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்தது ----------

**விடை: சரி**

2. வங்காளம், பம்பாய், சென்னை, மேற்கு பஞ்சாப் மற்றும் இராஜபுதனம் ஆகிய பகுதிகள் புரட்சியில் கலந்து கொண்டன ------------

**விடை: தவறு**

3. வேலூர்க் கோட்டையானது பெரும்பாலான இந்திய வீரர்களை கொண்டிருந்தது -------

**விடை: சரி**

4. தாடி மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக் கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர் -----------

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. 1. சிவகங்கையின் இராணி ஜான்சிராணி ஆவார்

2. வேலு நாச்சியார் தனது நம்பிக்கைக்குரிய படைத்தளபதி மற்றும் தொண்டர் குயிலி என்பவரால் ஒரு தற்கொலை தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தார்

3. வேலுநாச்சியார் வீரமங்கை எனவும் அறியப்படுகிறார்

4. இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட கடைசி பெண்ணரசி ஆவார்

(அ) 1 மற்றும் 2 சரி (ஆ) 2,3 மற்றும் 4 சரி

**(இ) 2 மற்றும் 3 சரி** (ஈ) 1 மற்றும் 4 சரி

**தவறான இணையைக் கண்டறியும்:**

1. **1. விஜயநகர ஆட்சியாளர்கள் - பாளையக்காரர்கள்**

2. வீரபாண்டிய கட்டபொம்மன் - பாளையம்

3. இராமநாதபுர கலெக்டர் - ஜாக்சன்

4. பூலித்தேவர் - நெற்கட்டும் செவல்

## புவியியல்

## அலகு – 1 பாறை மற்றும் மண்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. கீழ்க்கண்டவற்றுள் எது பாறைக்கோளம் என அழைக்கப்படுகிறது?

(அ) வளிமண்டலம் (ஆ) உயிர்க்கோளம் **(இ) நிலக்கோளம்** (ஈ) நீர்க்கோளம்

2. உலக் மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்

(அ) ஆகஸ்ட் 15 (ஆ) ஜனவரி 12 (இ) அக்டோபர் 15 **(ஈ) டிசம்பர் 5**

3. உயிரினப் படிமங்கள் ---------- பாறைகளில் காணப்படுகின்றன.

**(அ) படிவுப் பாறைகள்** (ஆ) தீப்பாறைகள்

(இ) உருமாறியப் பாறைகள் (ஈ) அடியாழப் பாறைகள்

4. மண்ணின் மேல் நிலை அடுக்கு

**(அ) கரிம மண் அடுக்கு** (ஆ) அடி மண் அடுக்கு

(இ) அடி மண் (ஈ) அடித்தள பாறை

5. பருத்தி வளர ஏற்ற மண்

(அ) செம்மண் **(ஆ) கரிசல் மண்** (இ) வண்டல் மண் (ஈ) மலை மண்

6. மண்ணின் முக்கிய கூறு

(அ) பாறைகள் **(ஆ) கனிமங்கள்** (இ) நீர் (ஈ) இவை அனைத்தும்

7. கீழ்க்கண்டவற்றில் எவ்வகை மண் பரவலாகவும் அதிக வளமுள்ளதாகவும் உள்ளது?

**(அ) வண்டல் மண்** (ஆ) கரிசல் மண் (இ) செம்மண் (ஈ) மலை மண்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பாறைகளைப் பற்றிய அறிவியல் சார்ந்த படிப்பு ---------

**விடை: பாறையியல்**

2. ------------- மண் திணைப் பயிர்கள் விளைவிப்பதற்கு ஏற்றதாகும்

**விடை:கரிசல்**

3. -------- 'புவியின் தோல்' என்று அழைக்கப்படுகிறது

**விடை: மண்**

4. உருமாறிய பாறைகளின் ஒரு வகையான ------- பாறை தாஜ்மகால் கட்ட பயன்படுத்தப்பட்டது

**விடை: வெள்ளைப் பளிங்கு**

5. ------------ பாறை 'முதன்மை பாறை' என்று அழைக்கப்படுகிறது

**விடை: தீப்**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகிறது

**விடை: சரி**

2. களிமண் பாறையிலிருந்து பலகைக்கல் (Slate) உருவாகிறது

**விடை: சரி**

3. செம்மண் சுவருதல் (Leaching) செயல்முறைகளில் உருவாகிறது

**விடை: தவறு**

4. இயற்கை மணலுக்கு மாற்றாக கட்டுமான பணிகளுக்கு 'செயற்கை மணல்' (M-Sand) பயன்படுகிறது

**விடை: சரி**

5. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.

**விடை: தவறு**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| i) கிரானைட் | 1. அடிப்பாறை |
| ii) மண் அடுக்கு | 2. அடியாழப் பாறைகள் |
| iii) பாரன் தீவு | 3. பட்டைப் பயிரிடல் வேளாண்மை |
| iv) மண் வளப்பாதுகாப்பு | 4. செயல்படும் எரிமலை |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| **(அ)** | **2** | **1** | **4** | **3** |
| (ஆ) | 2 | 1 | 3 | 4 |
| (இ) | 4 | 3 | 2 | 1 |
| (ஈ) | 3 | 4 | 2 | 1 |

2. i) பசால்ட் (கருங்கல்) 1. ஆந்த்ரசைட்

ii) சுண்ணாம்பு 2. வெளிப்புற தீப்பாறைகள்

iii) நிலக்கரி 3. உருமாறியப் பாறைகள்

iv) ஜெனிஸ் (நைஸ்) 4. படிவுப்பாறைகள்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| **(அ)** | **2** | **1** | **4** | **3** |
| (ஆ) | 2 | 1 | 3 | 4 |
| (இ) | 4 | 3 | 2 | 1 |
| (ஈ) | 3 | 4 | 2 | 1 |

**தவறான இணையைக் கண்டறியும்:**

1. அ) தீப்பாறைகள் முதன்மைப் பாறைகள் என்று அழைக்கப்படுகிறது

ஆ) பாறைகள் வானிலை சிதைவினால் மண்ணாக உருமாறுகிறது

**இ) படிவுப் பாறைகள் கடினமான தன்மை கொண்டவை**

ஈ) தக்காண பீடபூமி பகுதிகள் தீப்பாறைகளால் உருவானவை

2. அ) மண்ணரிப்பு மண் வளத்தை குறைக்கிறது

**ஆ) இயக்க உருமாற்றம் அதிக வெப்பத்தினால் உருவாகிறது**

இ) மண் ஒரு புதுப்பிக்கக் கூடிய வளம்

ஈ) இலைமக்குகள் மேல் மட்ட மண்ணின் ஒரு பகுதியாகும்

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

கூற்று : படிவுப் பாறைகள் பல்வேறு அடுக்குகளைக் கொண்டவை

காரணம்: படிவுப் பாறைகள் பல்வேறு காலங்களில் உருவானவை

**அ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**

ஆ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

இ. கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

ஈ. கூற்று தவறு. ஆனால், காரணம் சரி

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. புவியில் தோன்றிய முதன்மையான பாறைகள் ------

**(அ) தீப்பாறைகள்** (ஆ) படிவுப்பாறைகள் (இ) உருமாறிய பாறைகள் (ஈ) இவை அனைத்தும்

2. நன்கு வளமான மண் உருவாக ஏறத்தாழ --------- வருடங்கள் ஆகும்

(அ) 4000 **(ஆ) 3000** (இ) 500 (ஈ) 750

3. -------- உவர்தன்மை மற்றும் நுண் துகள்களைக் கொண்டது

(அ) கரிசல்மண் (ஆ) மலை மண் **(இ) பாலை மண்** (ஈ) செம்மண்

4. இரும்பு ஆக்சைடு உள்ள மண் ---------

**(அ) செம்மண்** (ஆ) கரிசல் மண் (இ) சரளை மண் (ஈ) பாலைமண்

5. பாறையியல் (petrology) என்ற சொல் மொழியில் இருந்து பெறப்பட்டது

(அ) இலத்தீன் **(ஆ) கிரேக்கம்** (இ) ரஷ்ய (ஈ) ஜெர்மனி

6. கருங்கல் (Basalt) வகை பாறைகள் ------------ பாறைகளுக்கு எடுத்துக்காட்டாகும்

**(அ) தீப்பாறைகள்** (ஆ) படிவுப்பாறைகள்

(இ) உருமாறிய பாறைகள் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

7. -------- என்ற சொல் இலத்தீன் மொழியில் இருந்து பெறப்பட்டது

(அ) செடி மெண்டம் **(ஆ) இக்னியஸ்** (இ) பெட்ரஸ் (ஈ) இவை அனைத்தும்

8. இத்தாலியில் உள்ள மவுண்ட் ----------- உலகின் முக்கியமான செயல்படும் எரிமலைகளாகும்

(அ) காட்வின் ஆஸ்டின் (ஆ) பாரன்தீவுகள் (இ) கிளிமாஞ்சாரோ **(ஈ) வெசூவியஸ்**

9. அடியாழப் பாறைகளுக்கு மற்றொரு பெயர் -------------

**(அ) பாதாளப் பாறைகள்** (ஆ) இடையாழ்ப் பாறைகள்

(இ) வெளிப்புற தீப்பாறைகள் (ஈ) ஊடுருவிய தீப்பாறைகள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இக்னியஸ் என்ற சொல் ------------- மொழியிலிருந்து பெறப்பட்டது

**விடை: இலத்தீன்**

2. செடிமென்டரி என்ற வார்த்தை ------- என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது

**விடை: செடிமெண்டம்**

3. சரளை மண்ணில் --------- போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிட ஏற்றது

**விடை: தேயிலை, காப்பி**

4. உருமாறிய பாறைகள் ------------ என இரண்டு வகைப்படும்

**விடை: வெப்ப உருமாற்றம். இயக்க உருமாற்றம்**

5. ஒவ்வொரு ஆண்டும் -------- உலக மண் நாளாக கொண்டாடப்படுகிறது

**விடை: டிசம்பர் 5ஆம் நாள்**

6. நன்கு வளமான மண் உருவாக ஏறத்தாழ -------- வருடங்கள் ஆகும்

**விடை: 3000**

7. புவியின் மேற்புற அடுக்கு --------- எனப்படும்

**விடை: மேலோடு**

8. புவியின் ஆழப்பகுதியில் உருகிய பாறைக்குழம்பு ----------- எனப்படும்

**விடை: மாக்மா**

9. பாறைத்துகள்கள் படியவைக்கபடுவதால் உருவாகக்கூடிய பாறைகள் ------------ எனப்படும்

**விடை: படிவுப்பாறைகள்**

10. எரிமலையில் இருந்து வெடித்து வெளியேறும் பாறைக்குழம்பு ---------

**விடை: லாவா**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. பௌதீக படிவுப்பாறைகள் | அ. இயற்கை வாயு |
| 2. அடியாழப்பாறைகள் | ஆ. கருங்கல் |
| 3. வெளிப்புறத்தீப்பாறைகள் | இ. மாக்கல் |
| 4. படிவுப்பாறைகள் | ஈ. எறும்புக்கல் |

**விடை: 1-இ, 2-ஈ, 3-ஆ. 4-அ**

2.

| | |
|---|---|
| 1. காற்று | அ. 25 % |
| 2. தண்ணீர் | ஆ. 10% |
| 3. தாதுப்பொருட்கள் | இ. 80 % |
| 4. உயிரினப்பொருட்கள் | ஈ. 5 % |
| 5. இலைமக்கு | உ. 25 % |
| 6. வேர்கள் | ஊ. 10 % |
| 7. அங்ககப்பொருட்கள் | எ. 45 % |

**விடை: 1-உ, 2-அ, 3-எ, 4-ஊ, 5-இ, 6-ஆ. 7-ஈ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. புவியின் மேலோடு பாறைகளால் உருவானது

**விடை: சரி**

2. தீப்பாறைகள் எரிமலை செயல்பாடுகளோடு தொடர்பு இல்லாதவை

**விடை: தவறு**

3. இத்தாலியில் உள்ள மவுண்ட் ஸ்ட்ராம்போலி உலகின் முக்கியமான செயல்படாத எரிமலை ஆகும்

**விடை: தவறு**

4. படிவுப்பாறைகள் அடுக்குப்பாறைகள் என்றும் அழைக்கப்படும்

**விடை: சரி**

5. உலகின் மிகப் பழமையான படிவுப்பாறைகள் கிரீன்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டன

**விடை: சரி**

**தவறான இணையைக் கண்டறியும்:**

1. அ. படிவுப்பாறைகள் மென்தன்மையுடையதால் எளிதில் அரிப்புக்கு இவை உட்படுகின்றன

ஆ. உருமாறியப்பாறைகள் பெரும்பாலும் படிக தன்மைக் கொண்டவை

**இ. தீப்பாறைகள் நீர்புகும் தன்மைக் கொண்டவை**

ஈ. தீப்பறைகள் தாய்ப்பாறைகள் என்று அழைக்கிறோம்

2. அ. மண் புவியின் தோல் என்று அழைக்கப்படுகிறது

**ஆ. மண்ணின் கூட்டுப்பொருள்கூறில் தாதுப்பொருட்களின் சதவீதம் 55% ஆகும்**

இ. மண்ணின் கலவையானது இடத்திற்கு இடம், காலத்திற்கு காலம் வேறுபடுகிறது

ஈ. மண், பீங்கான்கள் மற்றும் மண் பொருள்கள் தயாரிக்கப்பயன்படுகிறது

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. கூற்று : தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைகள் குழம்பு உறைந்து உருவானதாகும்

காரணம் : தீப்பாறைகளிலிருந்து மற்றப் பாறைகள் உருவாகின்றதால் இவற்றை முதன்மைப பாறைகள் என்று அழைக்கிறோம்

**அ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**

ஆ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

இ. கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

ஈ. கூற்று தவறு. ஆனால், காரணம் சரி

## அலகு – 2 வானிலை மற்றும் காலநிலை

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. புவியின் வளிமண்டலம் ------------- நைட்ரஜன் மற்றும் -------------- ஆக்சிஜன் அளவைக் கொண்டுள்ளது

(அ) 78% மற்றும் 21% (ஆ) 22% மற்றும் 1%

(இ) 21% மற்றும் 0.97% (ஈ) 10% மற்றும் 20%

**குறிப்பு: விடை: 21% மற்றும் 78%**

2. ------------ ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்

(அ) புவி (ஆ) வளிமண்டலம் **(இ) காலநிலை** (ஈ) சூரியன்

3. புவி பெறும் ஆற்றல் -------

(அ) நீரோட்டம் (ஆ) மின்காந்த அலைகள் (இ) அலைகள் **(ஈ) வெப்பம்**

4. கீழ்க்கண்டவற்றில் எவை சம அளவு மழை உள்ள இடங்களை இணைக்கும் கோடு ஆகும்

(அ) சமவெப்பக்கோடு (ஆ) சம சூரிய வெளிச்சக் கோடு

(இ) சம காற்றழுத்தக்கோடு **(ஈ) சம மழையளவுக் கோடு**

5. -------- என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது

(அ) காற்றுமானி (ஆ) அழுத்தமானி **(இ) ஈரநிலை மானி** (ஈ) வெப்பமானி

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ------------ என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும்

**விடை: வானிலை**

2. வானிலையைப் பற்றிய அறிவியல் ஆய்வு ------------

**விடை: வளியியல்**

3. புவியில் அதிகட்ச வெப்பம் பதிவான இடம் ----------

**விடை: கீரின்லாந்து**

4. காற்றில் உள்ள அதிகபட்ச நீராவிக் கொள்ளளவுக்கும் உண்மையான நீராவி அளவிற்கும் உள்ள விகிதாச்சாரம் ----------------

**விடை: ஒப்பு ஈரப்பதம்**

5. அனிமாமீட்டர் மற்றும் காற்றுமானி மூலம் ---------- மற்றும் -------------- ஆகியவை அளக்கப்படுகின்றன

**விடை: காற்றின் வேகம், காற்றின் திசை**

6. சம அளவுள்ள வெப்ப நிலையை இணைக்கும் கற்பனைக் கோடு -------

**விடை: சமவெப்பக்கோடு**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. காலநிலை | அ. புயலின் அமைவிடத்தையும் அது நகரும் திசையையும் அறிந்து கொள்வது |
| 2. ஐசோநிப் | ஆ. சூறாவளி |
| 3. ஈரநிலைமானி | இ. சம அளவுள்ள பனிபொழிவு |

4. ரேடார் ஈ. நீண்ட நாளைய மாற்றங்கள்

5. குறைந்த அழுத்தம் (தாழ்வு அழுத்த மண்டலம்) உ. ஈரப்பதம்

**விடை: 1-ஈ. 2-இ, 3-உ, 4-அ, 5-ஆ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பல்வேறு வாயுக்களால் ஆன கலவையாகும்

**விடை: சரி**

2. வானிலை பற்றிய அறிவியல் பிரிவிற்கு காலநிலை என்று பெயர்

**விடை: தவறு**

3. சமமான சூரிய வெளிச்சம் உள்ள பகுதிகளை இணைக்கும் கோட்டிற்கு சம சூரிய வெளிச்சக் கோடு என்று பெயர்

**விடை: சரி**

4. ஈரப்பதத்தை கணக்கிடும் கருவி அரனிராய்டு அழுத்தமானி

**விடை: தவறு**

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. Climate என்ற சொல் கிளைமா என்ற பண்டைய --------- மொழியில் இருந்து பெறப்பட்டதாகும்

**(அ) கிரேக்க** (ஆ) ரஷ்ய (இ) லத்தின் (ஈ) ஜெர்மனி

2. சூரிய கதிர்வீச்சுகளில் இருந்து பெறப்படும் வெப்ப ஆற்றல் --------- வழிமுறைகளில் புவியை வந்தடைகிறது

(அ) இரண்டு **(ஆ) மூன்று** (இ) நான்கு (ஈ) ஐந்து

3. --------- என்பது வானிலை மற்றும் காலநிலையின் முக்கியமான கூறு ஆகும்

(அ) மழை (ஆ) காற்று (இ) ஈரப்பதம் **(ஈ) வெப்பம்**

4. சம அளவு வெப்பநிலைக் கொண்ட இடங்களை இணைத்து வரையப்படும் கற்பனைக் கோடுகள் ----------

(அ) சம வெப்பக்கோடு (ஆ) சம காற்றழுத்தக்கோடு

**(இ) சமவெப்பக் கோடு** (ஈ) சம சூரிய வெளிச்சக் கோடு

5. புவி ----------- வெப்ப மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது

(அ) இரண்டு (ஆ) நான்கு (இ) ஏழு **(ஈ) மூன்று**

6. கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதி --------- ஆகும்

**(அ) வெப்ப மண்டலம்** (ஆ) மிதவெப்ப மண்டலம்

(இ) குளிர் மண்டலம் (ஈ) இவை அனைத்தும்

7. குறைந்த காற்றழுத்த மண்டலத்தை --------- என்ற எழுத்தால் வானிலை வரைபடத்தில் குறிக்கப்படுகிறது

(அ) H **(ஆ) L** (இ) S (ஈ) P

8. அதிக காற்றழுத்த மண்டலத்தை --------- என்ற எழுத்தால் வானிலை வரைபடத்தில் குறிக்கப்படுகிறது

**(அ) H** (ஆ) L (இ) P (ஈ) S

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கிளைமோ என்றால் தமிழில் ------- என்று பொருள்

**விடை: சாய்வுகோணம்**

2. வளியியல் என்பது வானிலையின் --------- விரிவாகும்

**விடை: அறிவியல்**

3. ------------ என்பது வானிலை மற்றுறும் காலநிலையின் முக்கியமான கூறு ஆகும்

**விடை: வெப்பநிலை**

4. சம அளவு வெப்பநிலைக் கொண்ட இடங்களை இணைத்து வரையப்படும் கற்பனைக் கோடுகள் ------------- ஆகும்

**விடை: சம வெப்பக்கோடுகள்**

5. வானிலை ஆய்வாளர்கள் காற்றழுத்தத்தை ------- மூலம் அளக்கின்றனர்

**விடை: காற்றழுத்தமானி**

6. கிடைமட்டமாக நகரும் வாயுவிற்கு --------- என்ற பெயர்

**விடை: காற்று**

7. வானிலை ஆய்வாளர்கள் ஈரப்பதத்தை ------- மூலம் அளக்கின்றனர்

**விடை: ஈரநிலைமானி**

8. --------- சம அளவுள்ள காற்றழுத்தத்தின் பரவலை காணப் பயன்படுகிறது

**விடை: சம அழுத்தக் கோடு**

9. இரு பொருட்களுக்கு இடையே நகரும் வெப்ப பரிமாற்றம் ------------ எனப்படும்

**விடை: வெப்பக் கடத்துதல்**

10. காற்றில் உள்ள நீராவியின் அளவு ------------ எனப்படும்

**விடை: ஈரப்பதம்**

**பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 1. | 1. நைட்ரஜன் | அ. காலநிலையின் அறிவியல் |
| | 2. வளியியல் | ஆ. வெப்ப மண்டலம் |
| | 3. காலநிலையியல் | இ. வானிலையின் அறிவியல் |
| | 4. அயன மண்டலம் | ஈ. சம மழையளவுக்கோடு |
| | 5. Isohytes (ஐ சோஹைட்ஸ்) | உ. 78 |

**விடை: 1-உ, 2-இ, 3-அ, 4-ஆ, 5-ஈ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. காற்றின் வேகத்தை அளக்க அனிமாமீட்டர் என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது

   **விடை: சரி**

2. பியோபோர்டு அளவை என்ற கருவி காற்றின் அழுத்தத்தை அளவிட பயன்படுகிறது

   **விடை: தவறு**

3. தென்மேற்கு பகுதியில் இருந்து வீசும் காற்றிற்கு வடகிழக்கு பருவக்காற்று என்று பெயர்

   **விடை: தவறு**

4. வளிமண்டல அழுத்த வேறுபாட்டை தொடர்ச்சியாகப் பதிவு செய்ய காற்றழுத்தப் பதிவுத்தாள் பயன்படுகிறது

   **விடை: சரி**

5. ஓர் இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும் அதிகப்பட்ச மற்றும் குறைந்தப்பட்ச வெப்பநிலைக்கும் இடையேயுள்ள சராசரியே வெப்பநிலை வீச்சு ஆகும்

   **விடை: சரி**

## அலகு – 3 நீரியல் சுழற்சி

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு --------------- என்று பெயர்

   (அ) ஆற்றின் சுழற்சி **(ஆ) நீரின் சுழற்சி** (இ) பாறைச்சுழற்சி (ஈ) வாழ்க்கைச் சுழற்சி

2. புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம் ------------

   (அ) 71% (ஆ) 97% **(இ) 2.8%** (ஈ) 0.6%

3. நீர், நீராவியிலிருந்து நீராக மாறும் முறைக்கு --------- என்று பெயர்

   **(அ) ஆவி சுருங்குதல்** (ஆ) ஆவியாதல் (இ) பதங்கமாதல் (ஈ) மழை

4. நீர், மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும் ஓடைகளிலும், ஏரிகளிலும், பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு -------------

(அ) ஆவி சுருங்குதல் (ஆ) ஆவியாதல்

(இ) நீர் உட்கசிந்து வெளியிடுதல் **(ஈ) நீர் வழிந்தோடல்**

5. நீர் தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு --------- என்று அழைக்கின்றனர்

**(அ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்** (ஆ) நீர் சுருங்குதல்

(இ) நீராவி சுருங்குதல் (ஈ) பொழிவு

6. குடிப்பதற்கு உகந்த நீரை ---------- என்று அழைப்பர்

(அ) நிலத்தடி நீர் (ஆ) மேற்பரப்பு நீர் **(இ) நன்னீர்** (ஈ) ஆர்ட்டீசியன் நீர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு ----------- என்று அழைக்கப்படுகிறது

**விடை: ஈரப்பதம்**

2. நீர்ச் சுழற்சியில் -------- நிலைகள் உள்ளன.

**விடை: மூன்று**

3. வளிமண்டலத்திற்கு புவியை நோக்கி விழும் எல்லா வகையான நீருக்கும் ---------- என்று பெயர்

**விடை: மழை**

4. மழைத்துளியின் அளவு 0.5 மீ குறைவாக இருந்தால், அம்மழை பொழிவின் பெயர் --------

**விடை: தூறல்**

5. மூடுபனி -------------ஐ விட அதிக அடர்த்தி கொண்டது

**விடை: அடர் மூடு பனி**

**பொருத்துக:**

1.
1. தாவரங்கள் அ. மேகங்கள்
2. நீர் சுருங்குதல் ஆ. கல்மழை
3. பனித்துளி மற்றும் மழைத்துளி இ. புவியின் மேற்பரப்பு
4. நீர் ஊடுருவுதல் ஈ. நீர் உட்கசிந்து வெளியிடுதல்

**விடை: 1-ஈ. 2-அ, 3-ஆ, 4-இ**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. நீராவியாதல் என்பது

i) நீராவி நீராக மாறும் செயலாக்கம்

ii) நீர் நீராவியாக மாறும் செயலாக்கம்

iii) நீர் $100^0$ C வெப்பநிலையில் கொதிக்கிறத. ஆனால் $0^0$ C வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது

iv) ஆவியாதல் மேகங்கள் உருவாக காரணமாக அமைகிறது

(அ) i, iv சரி (ஆ) ii சரி **(இ) ii,iii சரி** (ஈ) அனைத்தும் சரி

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. $212^0$ F வெப்பநிலையில் நீர் கொதிக்கிறது. ஆனால் $32^0$ F வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது

**விடை: சரி**

2. மூடுபனி எனப்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர் துளிகளைப் பெற்றிருப்பதில்லை.

**விடை: தவறு**

3. அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் பொதுவாக இடை நீர் ஓட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது

**விடை: சரி**

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ------------ புவியின் மேற்பரப்பு நீரால் சூழப்பட்டுள்ளது

**(அ) 71%** (ஆ) 79% (இ) 3% (ஈ) 21%

2. இந்தியாவில் நீர்வளம் ---------- ஆதாரங்களிலிருந்து கிடைக்கிறது

(அ) இரண்டு **(ஆ) மூன்று** (இ) நான்கு (ஈ) ஆறு

3. நீர் திரவநிலையிலிருந்து வாயு நிலைக்கு மாறுவதற்கு --------- என்று பெயர்

(அ) ஆவியீர்ப்பு (ஆ) நீர் ஊடுருவல் **(இ) ஆவியாதல்** (ஈ) உட்கசிதல்

4. ---------- வெப்பநிலையில் நீர் கொதிக்கின்றது

**(அ) $100^0$** (ஆ) $80^0$ (இ) $60^0$ (ஈ) $40^0$

5. ----------- வெப்ப நிலையிலேயே ஆவியாகத் தொடங்குகிறது

(அ) 10 **(ஆ) 0** (இ) 15 (ஈ) -10

6. ------------- என்பது தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயலாக்கம் ஆகும்

(அ) நீர் சுருங்குதல . **(ஆ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்**

(இ) ஆவியீர்ப்பு (ஈ) நீர் ஆவியாதல்

7. ஆவியாதல் விகிதம் அதிகரிக்க காரணம் ---------------

(அ) காற்றின் வேகம் அதிகரிக்கும் பொழுது (ஆ) வெப்பநிலை அதிகரிக்கும் பொழுது

(இ) ஈரப்பதம் குறையும் பொழுது **(ஈ) மேற்கூறிய அனைத்தும்**

8. அடர் மூடுபனியின் உயரம் 10 கி.மீட்டர் அல்லது அதற்கு குறைவான உயரம் --------------- போக்குவரத்திற்கு உகந்தது

**(அ) விமான** (ஆ) சாலை (இ) கடல் (ஈ) தரை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. புவியின் மிக முக்கிய கூறுகளில் ---------- ஒன்றாகும்

**விடை: நீர்**

2. புவியில் தூய நீரின் சதவிகிதம் --------------

**விடை: 2.8**

3. ---------- என்பது உலக அளவிலான ஒரு நிகழ்வு ஆகும்

**விடை: நீரியல் சுழற்சி**

4. புவியின் மேற்பரப்பிலுள்ள மண்ணின் அடுக்கிற்குள் நீர் புகுதலுக்கு --------- என்று பெயர்

**விடை: நீர் ஊடுருவல்**

5. மழை நீரில் --------- சதவீதமானது மண்ணில் உறிஞ்சப்படுகிறது

**விடை: 65**

6. மழைநீரில் 85 சதவீதம் மட்டுமே -------- மற்றும் ------------- கலக்கிறது

**விடை: கடல், பேராழிகளில்**

7. வெப்பநிலை குறையும் பொழுது ------------ பூரித நிலையை அடைகிறது

**விடை: காற்று**

8. மழைப்பொழிவானது 5 மி.மீ விட்டத்தை விட பெரிய உருண்டையான பனிக்கட்டிகளைக் கொண்டு இருந்தால் -------- என்று பெயர்

**விடை: ஆலங்கட்டி மழை**

9. --------------- என்பது நீராவி காற்றில் செறிந்து பூரித நிலையை அடைவது

**விடை: நீர் சுருங்குதல்**

10. ----------- ஆவியாதல் அதிகமாகவும், பொழிவு குறைவாகவும் உள்ளது

**விடை: பேராழிகளின்**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. மழைப்பொழிவின் வடிவம் | அ. ஆவியாதல் |
| 2. பனி | ஆ. நீர்மயியல் சுழற்சி |
| 3. மேல்மட்ட நீர் வழிந்தோடல் | இ. கல் மழை |
| 4. திரவமாய் சுருங்குதல் | ஈ. துருவப் பகுதிகள் |

5. 90% ஈரப்பதம் உ. நிலநீர் ஓட்டம்

**விடை: 1-இ, 2-ஈ. 3-உ, 4-ஆ, 5-அ**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. 1) நீரியல் சுழற்சி சூரிய உந்துதல் செயலாக்கத்தால் நடைபெறும் உலகளாவிய நிகழ்வு

2) நீர் கடலில் இருந்து ஆவியாதல் மூலம் வளி மண்டலத்திற்குச் சென்று பின் வளி மண்டலத்தில் இருந்து மழைப்பொழிவாக நிலத்திற்கும், நிலத்தில் இருந்து நீராக கடலுக்கும் சென்றடைகிறது

3) நீர் சுழற்சியில் உள்ளாகும் நீரின் அளவு மாறும்

4) இது நீர்ப்பரவல், இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடும்

**(அ) 1, 2 மற்றும் 4 சரி** (ஆ) 1. 4 சரி (இ) 2, 3 சரி (ஈ) 2, 3 தவறு

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. புவியில் உள்ள பெரும் பகுதியிலான நீர் நன்னீர் ஆகும்

**விடை: தவறு**

2. புவியில் கிடைக்கப்பெறும் நீரானது ஒரே சீராக இருப்பதில்லை

**விடை: சரி**

3. நீர் வளமானது சில இடங்களில் அதிகமாகவும், சில இடங்களில் மிக குறைவாகவும் உள்ளது

**விடை: சரி**

4. நிலப்பரப்பில் ஆவியாதல் அதிகமாகவும், பொழிவு குறைவாகவும் உள்ளது

**விடை: தவறு**

5. நீர்த்துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது பனி உருவாகிறது

**விடை: சரி**

## குடிமையியல்

## அலகு – 1 மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது?

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?

**(அ) குடியரசுத் தலைவர்** (ஆ) துணைக் குடியரசுத் தலைவர்

(இ) பிரதம மந்திரி (ஈ) முதலமைச்சர்

2. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்

(அ) ஆளுநர் **(ஆ) முதலமைச்சர்** (இ) சபாநாயாகர் (ஈ) உள்துறை அமைச்சர்

3. மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர்

(அ) உள்துறை அமைச்சர் (ஆ) குடியரசுத் தலைவர் (இ) சபாநாயகர் **(ஈ) ஆளுநர்**

4. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?

(அ) ஆளுநர் **(ஆ) முதலமைச்சர்**

(இ) உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி (ஈ) குடியரசுத் தலைவர்

5. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒய்வு பெறும் வயது

**(அ) 62** (ஆ) 64 (இ) 65 (ஈ) 58

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை ------------ ஆகும்

**விடை: 29**

2. ஆளுநரின் பதவிக்காலம் ------------ ஆண்டுகள் ஆகும்

**விடை: ஐந்து**

3. மாவட்ட நீதிபதிகள் -------------ஆல் நியமிக்கப்படுகின்றனர்

**விடை: ஆளுநரால்**

4. ஆளுநர் ஒரு மாநிலத்தின் ---------- ஆவார்

**விடை: நிர்வாகத் தலைவர்**

5. ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக ----------- வயது நிறைவடைந்திருக்க வேண்டும்

**விடை: 25**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. ஆளுநர் | அ. கீழவை |
| 2. முதலமைச்சர் | ஆ. பெயரளவுத் தலைவர் |
| 3. சட்டமன்ற பேரவை | இ. மேலவை |
| 4. சட்டமன்ற மேலவை | ஈ. உண்மையான தலைவர் |

**விடை: 1-ஆ. 2-ஈ. 3-அ, 4-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்

**விடை: சரி**

2. ஆளுநர் சட்ட மன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்

**விடை: தவறு**

3. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்

i) குடியரசுத் தலைவர்

ii) துணை குடியரசுத் தலைவர்

iii) ராஜ்ய சபை உறுப்பினர்கள்

iv) சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்

(அ) i, ii & iii சரி (ஆ) i மற்றும் iii சரி

**(இ) i, iii மற்றும் iv சரி** (ஈ) i, ii, iii மற்றும் iv சரி

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. மாநில ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் ---------- வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்

(அ) 25 (ஆ) 18 (இ) 30 **(ஈ) 35**

2. மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக ---------- செயல்படுகிறார்

**(அ) ஆளுநர்** (ஆ) முதலமைச்சர் (இ) சபாநாயகர் (ஈ) பிரதம அமைச்சர்

3. தமிழ்நாட்டில் --------- சட்டமன்ற தொகுதிகள் உள்ளன.

(அ) 232 **(ஆ) 234** (இ) 238 (ஈ) 245

4. வாக்களிக்கும் வயது ------------

(அ) 25 (ஆ) 15 **(இ) 18** (ஈ) 20

5. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு -------------- இருக்கும்

(அ) உச்சநீதிமன்றம் **(ஆ) உயர் நீதிமன்றம்**

(இ) மாவட்ட நீதிமன்றம் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சட்டமன்ற பேரவை சட்டமன்ற மேலவையைக் காட்டிலும் -------------- அதிகாரம் உண்டு

**விடை: அதிக**

2. ஒரு சட்டமன்ற தொகுதி ---------- அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கும்

**விடை: ஒரு லட்சம்**

3. எந்த கட்சியையும் சாராத ஒருவர் ------------- வேட்பாளர் என அழைக்கப்படுகிறார்

**விடை: சுயேட்சை**

4. -------- பதவி விலகுதல் என்பது ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகுதலினை குறிக்கும்

**விடை: முதலமைச்சர்**

5. முதலமைச்சர் பதவி ஏற்கும்போது உறுப்பினராக இல்லாவிட்டால் ------------ மாதத்திற்குள் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்

**விடை: 6**

6. ----------- மற்றும் --------------- ஆலோசனையின் பேரில் ஆளுநர் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமிக்கிறார்

**விடை: முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின்**

7. மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி ---------- கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கும்

**விடை: ஆளுநரின்**

8. ------------ மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது

**விடை: உயர்நீதிமன்றம்**

9. சட்டமன்றம் ஆண்டிற்கு ------------ அல்லது ---------- முறை கூடும்

**விடை: இரண்டு அல்லது மூன்று**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. மாநில அரசின் தலைவர் | அ. ஆளுநரை நியமிப்பவர் |
| 2. குடியரசுத்தலைவர் | ஆ. 18 |
| 3. சட்டமன்றம் | இ. ஆளுநர் |
| 4. வாக்களிக்கும் வயது | ஈ. சட்டங்களை இயற்றுவது |

**விடை: 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. மாநில அரசாங்கம் ஆளுநரை பதவியில் இருந்து நீக்க இயலாது

**விடை: சரி**

2. ஆளுநர் மாநில அரசின் முகவராக மாநிலத்தில் செயல்படுகிறார்

**விடை: தவறு**

3. முதலமைச்சர் அமைச்சரவையின் தலைவர் ஆவார்

**விடை: சரி**

4. பீகார், கர்நாடகம் மற்றும் உத்திரபிரதேசம் ஆகியவை ஈரவை சட்டமன்றம் கொண்ட மாநிலங்கள் ஆகும்

**விடை: சரி**

5. சட்டமன்ற மேலவை ஒரு நிலையான அவை.

**விடை: தவறு**

## அலகு – 2 குடிமக்களும் குடியுரிமையும்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?

(அ) பிறப்பின் மூலம் **(ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்**

(இ) வம்சாவழியின் மூலம் (ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

2. அரசிலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன?

(அ) பகுதி II **(ஆ) பகுதி II பிரிவு 5-11**

(இ) பகுதி II பிரிவு 5-6 (ஈ) பகுதி I பிரிவு 5-11

3. இந்தியாவின் முதல் குடிமகன் யார்

(அ) பிரதமர் **(ஆ) குடியரசுத்தலைவர்** (இ) முதலமைச்சர் (ஈ) இந்திய தலைமை நீதிபதி

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஒரு நாட்டின் ------------- , அந்நாடு வழங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்

**விடை: குடிமகன்**

2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் -------------- குடியுரிமையை மட்டும் வழங்குகிறது

**விடை: ஒற்றை**

3. இந்தியக் கடவுச்சீட்டினைப் பெற்று (Passport) வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் --------- என அழைக்கப்படுகிறார்

**விடை: NRI வெளிநாட்டுவாழ் இந்தியர்**

4. மக்கள் அனைவரும் உரிமைகள் மற்றும் ----------யும் இயற்கையாக பெற்றிருக்கின்றனர்

**விடை: கடமைகள்**

5. --------- என்பது இளைஞர்களை நவீன சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்க செய்யும் ஒரு யோசனை ஆகும்

**விடை: உலகளாவிய குடியுரிமை**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது

**விடை:தவறு**

2. வெளிநாட்டுக் குடியுரிமையை கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவருக்கு வாக்குரிமை உண்டு

**விடை: தவறு**

3. அடிப்படை உரிமைகளை இந்தியக் குடிமகன் அனுபவிக்க நமது அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது

**விடை: சரி**

4. நாட்டுரிமையை மாற்ற இயலும். ஆனால் குடியுரிமை மாற்ற இயலாது

**விடை: தவறு**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. ஒரு இந்தியக் குடிமகனின் குடியுரிமை கீழ்க்கண்ட எதனால் முடிவுக்கு வருகிறது

i) ஒருவர் வேறு நாட்டுக் குடியுரிமை பெறும் போது

ii) பதிவு செய்வதன் மூலம்

iii) தவறான மோசடி வழிகளில் ஒருவர் குடியுரிமை பெற்றார் என்று அரசு கருதும் போது

iv) போரின் போது எதிரி நாட்டிடம் இந்திய குடிமகன் வணிகம் செய்யும் போது

(அ) i மற்றும் ii சரி **(ஆ) i மற்றும் iii சரி**

(இ) i, ii, iv சரி (ஈ) i, ii, iii சரி

2. கூற்று : 1962 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்திய குடிமக்களாயினர்

காரணம்: 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் படி பிரதேசங்களை இணைத்தல் என்பதன் அடிப்படையில் அவர்கள் இந்திய குடிமக்களாகினர்

**(அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**

(ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(ஈ) காரணம், கூற்று இரண்டும் தவறு

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ஒரு நாட்டின் அரசாங்கத்தைப் பற்றியும், மக்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் படிக்கும் இயல் ------------- ஆகும்

**(அ) குடிமையியல்** (ஆ) பொருளியல் (இ) வணிகவியல் (ஈ) தொழில்நுட்பவியல்

2. இந்தியக் குடியுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு -----------

(அ) 1945 **(ஆ) 1955** (இ) 1947 (ஈ) 1950

3. குடியுரிமை --------- வகைப்படும்

(அ) நான்கு (ஆ) மூன்று **(இ) இரண்டு** (ஈ) ஐந்து

4. சிவிஸ் என்னும் சொல் --------- வார்த்தையில் இருந்து பெறப்பட்டது

**(அ) லத்தீன்** (ஆ) சமஸ்கிருதம் (இ) கிரேக்கம் (ஈ) ஆங்கிலம்

5. ------------------ இந்தியாவுடன் இணைந்தபொழுது இந்திய அரசு குடிமக்களுக்கு 1962ல் இந்திய குடியுரிமைக்கான ஆணையை வழங்கியது

(அ) மாஹி **(ஆ) பாண்டிச்சேரி** (இ) கோவா (ஈ) டையூ

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சிவிஸ் என்பதன் பொருள் ------------ என்பதாகும்

**விடை: குடியிருப்பாளர்**

2. --------- என்பது ஒரு குடிமகன் அவர் விரும்பும் காலம் வரையில் அந்நாட்டில் சட்டப்படியாக வசிக்கும் உரிமையை வழங்குதல் ஆகும்

**விடை: குடியுரிமை**

3. பிறப்பால் இயற்கையாக பெறக்கூடிய குடியுரிமை ---------

**விடை: இயற்கை குடியுரிமை**

4. இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை ---------

**விடை: இயல்புக்குடியுரிமை**

5. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ---------- குடியுரிமை உள்ளது

**விடை: இரட்டைக் குடியுரிமை**

6. NRI என்பது -------------

**விடை: வெளிநாடு வாழ் இந்தியர்**

7. இந்திய அரசியலமைப்பு -------------வது சட்டதிருத்தத்தின்படி ---------- குடிமக்களுக்கான அடிப்படை கடமைகள் வரையறுக்கப்படுகின்றன

**விடை: 42, இந்தியர்**

8. ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் ------------- எனப்படுவர்

**விடை: அந்நியர்**

9. இந்தியாவில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ------- கொண்டாடப்படுகிறது

**விடை: பிரவாசி பாரதிய தினம்**

10. பிரவாசி பாரதிய தினம் ------------ நாள் கொண்டாடப்படுகிறது

**விடை: ஜனவரி 9 ஆம்**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. நேர்மையாக வரி செலுத்துதல் குடிமக்களின் கடமை ஆகும்

**விடை: சரி**

2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இரட்டை குடியுரிமையை நமக்கு வழங்குகிறது

**விடை: தவறு**

3. ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறுவர் எனப்படுகிறார்

**விடை: சரி**

4. இந்தியாவில் அங்கீகரிப்படாத மொழிகளில் எண்ணிக்கை 22

**விடை: தவறு**

## பொருளியல்

## அலகு 1 பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன

(அ) தங்கம் (ஆ) வெள்ளி (இ) வெண்கலம் **(ஈ) மேற்கூறிய அனைத்தும்**

2. இந்திய ரூபாய் குறியீட்டினை வடிவமைத்தவர் யார்?

**(அ) உதயகுமார்** (ஆ) அமர்த்தியாசென்

(இ) அபிஜித் பானர்ஜி (ஈ) இவற்றில் எவரும் இல்லை

3. பணத்தின் மதிப்பு

(அ) அக பணமதிப்பு (ஆ) புற பண மதிப்பு

**(இ) அ மற்றும் ஆ** (ஈ) எதுவுமில்லை

4. வங்கி பணம் என்பது எது?

**(அ) காசோலை** (ஆ) வரைவு

(இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

5. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

முதலீட்டுக் கருவி போன்றவைகள்

(அ) பங்கு வர்த்தகம் (ஆ) பத்திரங்கள் (இ) பரஸ்பர நிதி **(ஈ) வரி செலுத்துவது**

6. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள்

(அ) வரி ஏய்ப்பவர்கள் (ஆ) பதுக்குபவர்கள்

(இ) கடத்தல்காரர்கள் **(ஈ) மேற்கண்ட அனைத்தும்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நிகழ்நிலை வங்கியை ------------ என்று அழைக்கலாம்

**விடை: இணைய வங்கி**

2. பணம் எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே ------

**விடை: பணம்**

3. மின்னணு வங்கியை ----------- என்றும் அழைக்கலாம்

**விடை: தேசிய மின்னணு நிதி**

4. கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் ------------- பணமாகும்

**விடை: நெகிழிப்**

5. இந்திய ரிசா்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ---------

**விடை: 1935**

6. பணம் என்ற வார்த்தை ----------- மூலம் பெறப்பட்டது

**விடை: ரோம் வார்த்தையான மோனோட்டா ஜீனோ**

7. இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது ------------

**விடை: ரிசா்வ் வங்கி**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. பண்டமாற்று முறை | அ. வரி ஏமாற்றுபவர்கள் |
| 2. இந்திய ரிசா்வ் வங்கி சட்டம் | ஆ. மின்னணு பணம் |
| 3. மின் - பணம் | இ. நுகர்வு தவிர்த்த வருமானம் |
| 4. சேமிப்பு | ஈ. பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் |
| 5. கருப்பு பணம் | உ. 1935 |

**விடை: 1-ஈ. 2-உ, 3-ஆ. 4-இ, 5-அ**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன

i) இருமுகத்தேவை பொருத்தமின்மை

ii) செல்வத்தை சேமிக்க சிரமமில்லை

iii) பொதுவான மதிப்பின் அளவுகோல்

iv) பொருட்களின் பகுபடாமை

(அ) i மற்றும் ii சரி (ஆ) i மற்றும் iv சரி

**(இ) i, iii மற்றும் iv சரி** (ஈ) மேற்கூறிய அனைத்தும்

**தவறான இணையைக் காண்க**

1. பரிமாற்றத்திற்கு பணத்தின் சமீபத்திய வடிவங்கள்

(அ) பற்று அட்டை **(ஆ) பண்டமாற்று முறை** (இ) கடன் அட்டை (ஈ) நிகழ் நிலை வங்கி

2. பொருளாதாரத்தில் இருப்புப் பணத்தின் விளைவுகள்

(அ) இரட்டை பொருளாதாரம் (ஆ) சமத்துவம் வலுவிழத்தல்

**(இ) உற்பத்தியில் விளைவுகள் இல்லை** (ஈ) ஆடம்பர நுகர்வுச் செலவு

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ---------

**(அ) 2002** (ஆ) 2001 (இ) 1999 (ஈ) 2004

2. 1988ஆம் ஆண்டு ----------- சட்டம் இயற்றப்பட்டது

(அ) பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் **(ஆ) ஊழல் தடுப்புச்சட்டம்**

(இ) பினாமி பரிவர்த்தன தடுப்புச் சட்ட திருத்தம் (ஈ) ரியல் எஸ்டேட்

3. ரியல் எஸ்டேட் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(அ) 2018 (ஆ) 2015 (இ) 2017 **(ஈ) 2016**

4. பணத்தின் பணிகளை ---------- வகையாக பிரிக்கலாம்

(அ) ஒன்று **(ஆ) மூன்று** (இ) நான்கு (ஈ) இரண்டு

5. நெகிழிப் பணத்திற்கு எடுத்துக்காட்டு -----------

**(அ) கடன் அட்டை** (ஆ) காசோலை (இ) நாணயம் (ஈ) கா்ச பணம்

6. செர்ஷா சூரி ------------ கிராம் எடையுள்ள வெள்ளி நாணயத்தை வெளியிட்டார்

**(அ) 178** (ஆ) 198 (இ) 208 (ஈ) 158

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தியாவின் ரூபாய் என்ற சொல் ------------ வார்த்தையிலிருந்து பெறப்பட்டது

**விடை: சமஸ்கிருத**

2. ரூபியா என்றால் -------- என்று பொருள்

**விடை: வெள்ளி நாணயம்**

3. பண்டமாற்று முறை ஒரு ------- பரிமாற்ற முறையாகும்

**விடை: பழைய**

4. கி.மு.8ம் நூற்றாண்டில் லிடியாவின் பேரரசர் மிடாஸ் ---------------- கண்டு பிடித்தார்

**விடை: உலோக நாணயத்தை**

5. டெல்லி துருக்கி சுல்தான்கள் தங்கள் நாணயங்களில் ---------- எழுத்துக்களை பொறித்து வெளியிட்டனர்

**விடை: இஸ்லாமிய**

6. ------------ காலம் முழுவதும் வெள்ளி நாணயம் பயன்பாட்டில் இருந்தது

**விடை: முகலாய**

7. காகிதப் பணத்தை கட்டுப்படுத்துவதும் ஒழுங்குபடுத்துவதும் அந்நாட்டின் --------- வங்கியாகும்

**விடை: மைய/இந்திய ரிசர்வ் வங்கி**

8. இந்திய ரூபாய் குறியீடு தமிழ்நாட்டில் உள்ள விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த -------- என்பவரால் வடிவமைக்கப்பட்டது

**விடை: திரு.உதயகுமார்**

9. 2016 நவம்பர் 8ஆம் தேதி இந்தியாவில் இந்தியா அரசாங்கம் ---------- நடவடிக்கையை அறிவித்தது

**விடை: பணம் மதிப்பிழப்பு**

10. ------------- என்பது தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காக பயன்படுத்தப்படாத ஒரு பகுதியேயாகும்

**விடை: சேமிப்பு**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. பூரணாஸ் | அ. தங்க நாணயங்கள் |
| 2. கரோலினா | ஆ. செம்பு நாணயங்கள் |
| 3. கப்ருன் | இ. வெண்கல நாணயங்கள் |
| 4. ஏஞ்ஜேலினா | ஈ. நாணயம் |
| 5. டின்னி | உ. வெள்ளி நாணயங்கள் |

**விடை: 1-ஈ. 2-அ, 3-ஆ. 4-உ, 5-இ**

winmeen.com